# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.18 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு. ரங்கசாமி** | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2026.

Accused present.

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது நாமக்ககல் மாவட்டம் பொருளாதார குற்ற பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் நாமக்கல் மாவட்டம் வேலூர் காவல் நிலையத்தில் 25.01.2015ம் தேதி காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது பரமத்தி காவல் நிலைய எல்லைகுட்பட்ட புதுப்பாளையம் டீக்கடை மற்றும் டிபன் கடை சக்கரபாணி என்பவருடைய கடையில் சிலிண்டர் மாற்றும்போது கேஸ் கசிந்து சிலிண்டர் வெடித்து 3 நபர்கள் இறந்துவிட்டதாகவும் பரமத்தி வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கூறிய வாய்மொழி உத்தரவின் பேரில் இறந்துபோன குப்புசாமி என்பவர் பிரேதத்தின் மீது 26.01.2015ம் தேதி காலை 8 மணி முதல் 10 மணி வரை அரசு தலைமை மருத்துவமனை நாமக்கல் சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் மாதேஸ்வரன், நடேசன், செந்தில்குமார், முருகன், மாலதி மற்றும் சாட்சிகள் செல்லம்மாள், வரதராஜ், மாதேஸ்வரன், செந்தில்குமார், கண்ணம்மாள் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பின்பு பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் பரமத்தி செந்தில்குமார் வசம் ஒப்படைத்தேன். பின்பு இறப்பின் உண்மையான காரணம் அறிந்து கொண்டு பிரேததின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டு சான்று வழங்குமாறு அரசு மருத்துவ அதிகாரி நாமக்கல் தலைமை மருத்துவமனை அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். நான் தயார் செய்த இறந்து போன குப்பு சாமி என்பவரது பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.14 ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

நான் காவல் துணை கண்காணிப்பாளரின் வாய்மொழி உத்தரவின் பேரில்தான் பிரேத விசாரணை மேற்கொண்டேன். நான் இவ்வழக்கு சம்பந்தமாக வேறு எந்த விசாரணையும் செய்யவில்லை.

மறுவிசாரணை : இல்லை.